1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No.356 /2020

2024 வது ஆண்டு ஜுன் மாதம் 11-ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ஜான் | வட்டம் | |
| க.பெ /த.பெ | திரு. பாக்கியநாதன் | கிராமம் | |
| வயது | 40 | மதம் | |

11.06.2024 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 5 ம் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 10.06.1976 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஒத்தி ஆவணம் அசல் வா.சா.ஆ.1. 23.07.2020 தேதியிட்ட பிரதிவாதிகள் மீது வழங்கப்பட்ட புகாருக்கு காவல் துறையினரால் வழங்கப்பட்ட மனு ரசீது ஒளிநகல் வா.சா.ஆ.2. தாவா சொத்து தொடர்பான வில்லங்க சான்றிதழ் கணணி பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.3. ஞானமுத்து நாடார் என்பவரின் இறப்பு சான்றிதழ் ஒளிநகல் வா.சா.ஆ.4. பாக்கியநாதன் என்பவரின் இறப்பு சான்றிதழ் கணணி பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.5. ஞானமுத்து நாடார் என்பவரின் வாரிசு சான்றிதழ் கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.6. தாவா சொத்தின் வழிகாட்டுதல் மதிப்பு கணிணி பதிவிறக்கம் செய்யப்பட்டது வா.சா.ஆ.7.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 25.06.2024 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)